புதிய அவையம்

**PUTHIYA AVAIYAM**
(PEER – REVIEWED JOURNAL)
**ISSN :2456-821X**
**Vol. 08, Issue 02, January 2025**

=====================================

# திருவாசக உவமைகளில் மலர்கள்

=====================================

முனைவர் ம.சரளாதேவி,
தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர்(சுழற்சி-2)
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி),
திருப்பத்தூர்.

=====================================================

திருவாசகம் சைவ சமயக் கடவுளான சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு நூலாகும் திருவாசகம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாம் திருமுறையைச் சார்ந்தது. இந்நூல் மாணிக்கவாசகரால் அருளப்பட்டது. இத்தகைய திருவாசகத்தில் மலர், மேகம், கானல், கடல்நீர், பறவை, எள், பாம்பு, மயில், பசு, மனம், தேன், மின்னல், மாலை, எறும்பு, முத்து, மான், மீன், விதை போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் உவமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய உவமைகளில் மலர் குறித்த உவமைகளை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**திருவாசகத்தின் சிறப்பு**

திருவாசகம் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் வரை 656 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. திருவாசகத்துக்கு உருகாதார், ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது பழைய வாக்கு. திருவாசகத்தைப் படித்தால் உள்ளம் இளகும். உயிர் உருகும். கரும்புச் சாற்றில் தேன் கலந்து, பால் கலந்து, கனியின் சுவை கலந்து இனிக்கும் திருவாசகப் பாடல்கள் உயிரில் கலந்து உவகை தரும் என்று இராமலிங்க வள்ளலார் கூறுவார்.

எலும்பை உருக்கும் பாட்டு என்று டாக்டர் ஜி.யு.போப் கூறுவார். திருவாசகத்தை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**உவம உருபுகள்**

இரு பொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையை உணர்த்துவதற்காக உவமைக்கும் பொருளுக்கும் இடையில் வரும் இடைச்சொல்லை உவம உருபு என்று கூறுகிறோம்.

ஒரு பொருளோடு மற்றொரு பொருளுக்கு இடையே உள்ள ஒப்புமையை எடுத்துக் கூறுவது உவமை ஆகும்.

உவமையும் அதுசுட்டும் பொருளும் இரண்டும் ஒன்றிற்கு ஒன்று தம்முள் ஒத்ததாகவே அமைந்திருத்தல் வேண்டும்.

"உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும் "(தொல்.பொருள்.279)

உவமை எப்படி அமைய வேண்டும் என்று சுட்டிக்காட்டிய தொல்காப்பியர் உவம உருபுகள் 36 வகைப்படும் என்பதையும் எடுத்துரைத்துள்ளார்.

"அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற வியப்ப என்றவை எனாஅ
எள்ள வழிய இறப்ப நிகர்ப்பக்

கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅக்
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஓடப் புரைய என்றவை எனாஅ
ஆறுஆறு உவமையும் அன்னவை பிறவும்
கூறும் காலைப் பலகுறிப் பினவே" (தொல்.பொருள்.282)

36 உவம உருபுகளும் இவற்றை ஒத்த பிறவும் பல பொருண்மைகளை உடைய உவம உருபுளாகும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆனால் நன்னூல் உவம உருபுகள் 12 வகைப்படும் என்கிறது.

"போல புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத்து உருபே" (நன்.367)

உவமையும் பொருளும் ஒத்து வருதல் வேண்டும். அவ்வாறின்றி ஒவ்வாது என்று நீக்கிக் கூறுதலும் உண்டு என்கிறது தொல்காப்பியம்.

ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே" (தொல்பொருள்.306)

திருக்குறள் இதற்கு இணையான குறளை எடுத்துரைத்துள்ளது.

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம் (குறள்.120)

மென்மையான அனிச்ச மலரும் அன்னப் பறவையின் சிறகும் தலைவியின் பாதத்திற்கு நெருஞ்சி முள்ளாகக் காட்டப்பட்டன. ஆயினும் அவை இரண்டும் பாதங்களுக்கு உவமையாகும்.

**திருவாசகத்தில் மலர்கள்**

தொல்காப்பியம் கருப்பொருள்களில் ஒன்றாக மலரைக் குறிப்பிட்டுள்ளது. அதேபோன்று

"எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும். " (தொல். பொருள்.21)

ஒரு திணைக்கு உரியவையாய்க் கூறப்பட்ட மலர்களும் பறவைகளும் அந்தந்தத் திணைக்குரிய நிலத்திற்கும் காலத்திற்கும் பொருந்தாமல் வேறு திணையிலும் இடம்பெறலாம். சிறுபான்மை மாறி வருவனவற்றை அந்தத் திணைக்குரிய கருப்பொருளாகவே அமைத்துக் கொள்ள வேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

| **வ.எண்** | **திருவாசகப் பாடல்** | **பொருள் (மலர்)** |
|---|---|---|
| 1. | நாற்றத்தின் நேரியாய் | மலர்மணத்தை ஒத்தவன் (ப.7) |
| 2. | கிஞ்சுக வாயவள் | முருக்கம் பூப்போன்ற வாய் இதழ்களைக் கொண்டவள் (ப.15) |
| 3. | குவளைக் கண்ணி | குவளை மலர் போன்ற கண்களை உடையவள் (ப.32) |
| 4. | பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட | நான் காந்தள் பூவின் மொட்டுப்போல எனது கைகளைக் கூப்பி அவனை அஞ்சலி செய்தேன். (ப.33) |
| 5. | பூவில் நாற்றம் போன்று | மலரின் மணம் போன்று உலகெங்கும் நீக்கமற நிறைந்துள்ள பெருமையுடையவன் அவன் (ப.37) |

| | | |
|---|---|---|
| 6. | மலர்க் கமல பாதனே | செந்தாமரை போன்ற திருவடிகளை உடையவனே. (ப.107) |
| 7. | செங்கண், செங்கமலப் பொன் பாதம் | தாமரை போன்ற சிவந்த கண்கள், பொன் தாமரைத் திருவடிகள் (ப.149) |
| 8. | நாள் மலர்ப் பாதங்கள் | அன்றலர்ந்த மலர் போன்ற தன் திருவடிகளை நம் தலைமேல் அணிந்து கொள்ளும்படி அருளிய மலையரசனின் மருமகனாகிய சிவபெருமானைப் பாடிப் பாடி மகிழ்ந்து நாம் பொற்சுண்ணத்தை இடிப்போம். (ப.167, 168) |
| 9. | மை அமர் கண்டனை | செவ்வரி படர்ந்த தாமரை மலர் போன்ற கண்கள். (ப.170) |
| 10. | பானல் தடம் கண் மடந்தை | கருங்குவளை மலர் போன்ற அகன்ற கண்களையுடைய நல்ல இளம் பெண்களே. (ப.172) |
| 11. | செழுக் கமலத் திரள் அன நின் சேவடி | செந்தாமரை போன்ற உனது திருவடிகளைச் சேர்தல் (ப.283) |
| 12. | பூம் கொடியார் | பூங்கொடி போன்ற இளம் பெண்கள் (ப.347) |
| 13. | கோங்கு அலர் சேர் குவி முலையாள் | கொங்கு மலர் மொட்டுப்போல் குவிந்த முலைகள் கொண்டவள். (ப.361) |
| 14. | சேய மா மலர்ச் | சிவந்த பெரிய செந்தாமரை |

| | | |
|---|---|---|
| | சேவடிக்கண் | மலர் போன்ற திருவடிகள் (ப.376) |

திருவாசகத்தில் மலர் குறித்த உவமைகள் அதிகம் காணப்பட்டாளும் அனைத்தும் சிவபெருமானைக் குறிப்பதாக இல்லை.

சிவபெருமான், உமாதேவி, பெண்கள், இறைவனை வழிபடுவோர் போன்றோருக்காக உவமைகள் கூறப்பட்டுள்ளது மிகச் சிறப்பு மிக்கதாகும். உவமைகள் அனைத்தும் தொல்காப்பியம், நன்னூல் குறிப்பிட்டுள்ள உவமைக்குரிய மரபின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

**இக்காலத்தில் உவமைகள்**

இக்காலத்தில் பயன்படுத்தப்படும் உவமைகள் அனைத்தும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட உவமைகளின் அடிப்படையிலே அமைக்கப்பட்டவை என்பது உண்மை.

| வ.எண். | உவமை | பொருள் |
|---|---|---|
| 1. | அச்சாணியற்ற தேர் போல | உயிர் நாடியற்றது |
| 2. | அத்தி பூத்தது போல | மிக அரிதாக |
| 3. | ஆண்டிகள் மடம் கட்டியது போல | உருவாகாத திட்டம் |
| 4. | ஆற்றில் கரைத்த புளி போல | பயனற்ற செயல் |
| 5. | கீரியும் பாம்பும் போல | பகை |
| 6. | உயிரும் உடம்பும் போல | ஒற்றுமை |
| 7. | கரடி பிறை கண்டது போல | மிக அரிது |
| 8. | உள்ளீடற்ற பதர் போல | போலி |
| 9. | அடியற்ற மரம் போல | மூலபலமற்றது |
| 10. | கடன்பட்டார் நெஞ்சம் போல | மிகுதியான துன்பம் |

| | | |
|---|---|---|
| 11. | கண்ணுக்கு இமை போ | பாதுகாப்பு |
| 12. | குரங்கின் கையில் பூமாலை போல | வீணடித்தல் |
| 13. | எலியும் பூனையும் போல | பகை உணர்வு |
| 14. | சிங்கத்தின் காதில் புகுந்த சிற்றெறும்பு போல | தொடர் மன உளைச்சல் |
| 15. | சூரியனைக் கண்ட பனி போல | உடனடியாக விலகுதல் |
| 16. | செத்து செத்து எழும் பீனிக்சு போல | உயிர்த்தெழுதல் |
| 17. | புற்றீசல் போல | திடீர் பெருக்கம் |
| 18. | பிணம் தின்ற பேய் போல | வேதனையிலும் வேதனை |
| 19. | வலையில் அகப்பட்ட மான் போல | வசமாகச் சிக்குதல் |
| 20. | நடுக்கடலில் விடப்பட்ட ஈழ அகதி போல | அச்ச உணர்வு |
| 21. | வேலியே பயிரை மேய்ந்தது போல | துரோகம் |
| 22. | பஞ்சும் தீயும் அருகில் இருந்தால் போல | விரைவாக உடன்படல் |
| 23. | நாய் பெற்ற தெங்கம் பழம் | பயனில்லாமை |
| 24. | செவிடன் காதில் சங்க ஊதுவது போல | பயனற்றது |
| 25. | ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் வைத்தாற் போல | உறுதி இல்லாத தடுமாற்றம் |

**முடிவுரை**

திருவாசகத்தில் மலர் குறித்துப் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைகளில் பெரும்பான்மை உடல் உறுப்புகளைக் குறிப்பதாகவே அமைந்துள்ளன. இவை தொல்காப்பியம், நன்னூல் குறிப்பிடும் உவமை மரபின் அடிப்படையில்

அமைக்கப்பட்டுள்ளன. அனைவரும் சமம் என்ற நிலையை மலர் குறித்த உவமைகள் வெளிப்படுத்துகின்றன.  இக்கால உவமைகள் திருவாசகத்தில் அதிக இடங்களில் இடம்பெற்றுள்ளன. சிவன். உமாதேவி  மக்கள் குறித்தும் குறிப்பாகப் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில்  மலருடன் உவமிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

**துணைநூற் பட்டியல்**


1. கா.சுப்பிரமணியப் பிள்ளை, திருவாசகம், பாரி நிலையம், சென்னை, 2007.
2. ஆ.திருவாசகன், திருவாசகம், அருள் – சுடர் பதிப்பகம், சென்னை. 1991.
3. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம்- பொருளதிகாரம், கதிர் பதிப்பகம். திருவையாறு. 2018.
4. ச.திருஞானசம்பந்தம், நன்னூல் - சொல்லதிகாரம், கதிர் பதிப்பகம். திருவையாறு. 2009.